அசல் வழக்கு எண்.30/18

பிடயுள்யு - 1 மகேஸ்குமார்

நாள்- 27-02-2019

குறுக்குவிசாரணை தொடர்ச்சி

என் தகப்பனாருக்கு 79 அல்லது 80 வயதிருக்கும்.உடல்நிலை நன்றாக இருக்கிறதா என்றால், ரத்த அழுத்தம் இருக்கிறது. நல்ல நினைவில்தான் இருக்கிறார். வழக்கில் சாட்சியமளிக்கபோகிறேன் என்று என் அப்பா, சித்தப்பா இருவரிடமும் சொல்லிவிட்டேன். 2 மற்றும் 3வது வாதிகள் இருவரும் என் சித்தப்பா. 2 ஆம் வாதி கந்தன் இறந்துவிட்டார். 3வது வாதி சென்னையில் இருக்கிறார். கந்தனுக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை. அவருக்கு திருமணம் ஆகவில்லை. வழக்கு நடக்கும் விவரம் 3 ஆம் வாதிக்கு தெரியும். தாவா சொத்துக்களை பொருத்து என் தகப்பனாருக்கு நன்கு தெரியுமா என்றால், வழக்குப்போடும்போதே அவருக்கு தெரியும். வழக்கு போடும்போது 3 ஆம் வாதி சென்னையில் இருந்தார். வழக்குபோடுவதற்காக வந்துவிட்டு போனார். தாவா சொத்துக்களை பொருத்து வில்லங்கசான்று வாங்கி பார்த்தேன். நானும், என் தகப்பனாரும் வி. எ .ஓ அலுவலகத்திற்கு சென்றோம். தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் என் தாத்தா பெயரிலும், சில சொத்துக்கள் பிரதிவாதிகள் பெயரிலும் உள்ளது. சர்வே எண். 244/8 எ , 261 /3பி1 , 478/19 என்ற சொத்துக்களை என் குடும்பத்தில் யாரும் கிரயம் செய்தார்களா என்றால், சர்வே நம்பரை வைத்து என்னால் சொல்ல முடியவில்லை. சர்வே எண் ஞாபகம் இல்லை. பன்னீர்செல்வம் மனைவி மல்லிகை சுந்தரம் என்னுடைய அம்மா. மல்லிகை சுந்தரம் பெயரில் கிரயம் ஏற்பட்டுள்ளது. அது 2003 ஆம் வருடமா என்றால், ஞாபகம் இல்லை. 10,15 வருடங்கள் இருக்குமா என்றாலும் ஞாபகம் இல்லை. அந்த கிரய பத்திரம் என் தாத்தா எழுதி கொடுத்தது. தாவாவில் உட்படாத பிரிக்கப்பட்ட நஞ்சை நிலங்கள் உள்ளன. பிரிக்கப்பட்டு தாவாவில் சேர்க்கப்படாத நிலங்கள் பெரியசாமி பெயரில் இருந்தது. பெரியசாமி இறந்தபிறகு அவருடைய மகன்களான வாதிகள்

பெயரில் மாறியுள்ளது. அவ்வாறு வாதிகள் பெயரில் உள்ள நிலங்கள் சுமார் 2 1/2 ஏக்கர் இருக்கும். அந்த நிலங்கள் வாதிகள் அனுபவத்தில்தான் உள்ளது. அந்த சொத்துக்கள் பிரிக்கப்பட்டது பெரியசாமியும் அவரது சகோரர் முருகேசனும் உயிருடன் இருந்த காலத்தில். பிரிக்கப்பட்டது. முருகேசனுக்கு அவருக்கு உரிய பாகம் கொடுக்கப்பட்டுள்ளது. இருவருக்கும் முன்னே, பின்னே சமமாகத்தான் இருக்கும். முருகேசனுக்கு கொடுக்கப்பட்ட நிலத்தின் சர்வே எண். தெரியாது. அந்த நிலங்கள் நஞ்சை சங்கேந்தி கிராமத்தில் உள்ளன. 1 முதல் 4 பிரதிவாதிகள் முருகேசனுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களை அனுபவித்து வருகிறார்கள். முருகேசனுடைய மகன்கள் சில சொத்துக்களை கிரயம் செய்தள்ளனர். வழக்கு போடுவதற்கு முன் ஏதேனும் கிரயம் செய்திருக்கிறார்களா என்பது ஞாபகம் இல்லை. 7 ஆம் பிரதிவாதி மகன் ராம்குமார் என்பவரை கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் பார்த்ததில்லை. இசி போட்டு பார்த்ததிலும், வி எ ஓ ரெக்கார்டிலும் ராம்குமார் பெயர் இருந்தது. அதனால் 7 ஆம் பிரதிவாதியை சேர்த்திருக்கிறேன். அவர் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திர நகலைவாங்கி பார்க்கவில்லை. ராம்குமார் எவ்வாறு கிரயம் வாங்கினார் என்று தெரிந்துகொண்டேனா என்றால், அவர்களுக்குள் பாகம் பிரிந்துகொண்டதாக கூறி கிரயம் செய்துள்ளனர். ஆனால் பாகம் பிரியவில்லை. அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பாகபத்திரத்தை நான் வாங்கி பார்த்ததில்லை. மல்லிகை சுந்தரம் ஏற்பட்ட கிரயபத்திரம் என்னிடம் இருக்கிறதா என்றால், என் தாயாரிடம் இருக்கிறது. நானும், என் அம்மாவும் சுமூகமாகத்தான் இருக்கிறோம். கிரயபத்திரம் என் தாயாரிடம் இருந்தால் அதனை என்னால் வாங்கி தாக்கல் செய்யமுடியும். தாவா 2,3,4 அயிட்ட சொத்துக்களைதான் ராம்குமார் கிரயம் வாங்கியிருக்கிறார். நான் தற்சமயம் லால்குடியில் குடியிருக்கிறேன். தாவா 2,3,4 அயிட்ட சொத்துக்கள் பொது அனுபவத்தில்தான் இருந்தது. அது வானம் பார்த்த பூமி. அதில் நான் விவசாயம் பார்த்தேனா என்றால், நான் அந்த நிலங்களில் விவசாயம் செய்யவில்லை. 2,3,4 அயிட்ட சொத்துக்களில் கேணி கிடையாது. இந்த வருடமும் அந்த சொத்தில் பயிர் எதுவும் செய்யவில்லை. கடைசியாக எப்போது அந்த நிலத்தில் பயிர்

செய்தோம் என்பதும் ஞாபகம் இல்லை. தற்போது 2,3,4 அயிட்ட சொத்துக்களின் பட்டா ராம்குமார் பெயரில் உள்ளது. வி.எ.ஓவை போய் பார்த்தபோது அவரிடம் யார் பெயரில் உள்ளது என்று கேட்டோம். அவர் ராம்குமார் பெயரில் உள்ளதாக சொன்னார். 7வது பிரதிவாதி குணசேகரணை எனக்கு நேரடியாக தெரியாது. அவருடைய முகவரியை ஊரில் விசாரித்து போட்டிருக்கிறேன்.அவருடைய கிரய பத்திரத்தை பார்த்து அவருடைய விலாசத்தை போடவில்லை. தாவா சொத்துக்களில் 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரயம் செய்வதற்கு முன் அனுபவித்து வந்தார்களா என்றால், இல்லை. அந்த சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்தன. இந்த சொத்துக்களுக்கு நானோ, என் தகப்பனாரோ, சித்தப்பாக்களோ சமீபகாலங்களில் வரி செலுத்தியிருக்கிறோமா என்றால், செலுத்தியிருக்கிறோம். அந்த வரி ரீசதுகள் தாக்கல் செய்யவில்லை.வீட்டில் வைத்திருக்கிறேன். அவற்றை என்னால் தாக்கல் செய்ய முடியும். கடைசியாக எப்பேது வரி கட்டினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பெரியசாமிக்கும், முருகேசனுக்கும் சொத்துக்கள் எந்த வருடம், மாதத்தில் பிரிந்தது என்பது தெரியாது. அந்த விவரம் என் தகப்பனாருக்கு தெரியும். பெரியசாமிக்கும், முருகேசனுக்கும் பாகம் பிரிக்கப்பட்டபோது, எந்தெந்த சொத்து யார், யாருக்கு என்பதற்கு குறிப்பு எழுதப்பட்டதா என்பது ஞாபகம் இல்லை. முருகேசனின் வாரிசுகள் ஒருவர் உள்ளூரில் இருக்கிறார். பக்கத்து ஊரில் ஒருவர் இருக்கிறார். ஒருவர் திருச்சியிலும், மற்றொருவர் சென்னையிலும் இருக்கின்றனர்.ஏற்கனவே பிரிந்த சொத்துக்களுக்கு தனித்தனியாக பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. தாவா சொத்துக்களுக்கு 2003 ஆம் வருடத்திற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்பது ஞாபகம்இல்லை. முருகேசன் பெயரில் இருந்ததா அல்லது அவருடைய மகன்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் இருந்தா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என் அப்பா பெயரில் தனிப்பட்ட பட்டா எதுவும் கிடையாது. எங்களுக்கு பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் பட்டா என் அப்பா மற்றும் சித்தப்பாக்கள் பெயரில் பட்டா உள்ளது. 242/1 பி1 என்ற சொத்து பெரியசாமி பெயரில் பட்டா உள்ளது. தாவா 3 வது அயிட்ட சொத்து பாகம்

பிரிக்கப்படவில்லை என்றும்,அதில் பாதி பங்கு எனக்கு கிடைக்கவேண்டும் என்று வழக்கு போட்டிருக்கிறேன். தாவா சொத்துக்கள் அனைத்திலுமே எனக்கு பாதி பங்கு கிடைக்கவேண்டும் என்றுதான் வழக்கு போட்டிருக்கிறேன். பெரியசாமியும், முருகேசனும், சில சொத்துக்களை பிரித்துக்கொண்டு, சில சொத்துக்களை பிரிக்காமல் வைத்து கொண்டதற்கு என்ன காரணம் என்றால், நஞ்சை நிலங்கள் பிரித்துகொண்டனர். புஞ்சை நிலங்கள் பிரிக்கப்படவில்லை. அவ்வாறு பிரிக்கப்படாததற்கு வேறு தனிப்பட்ட காரணங்கள் உள்ளதா என்பது எனக்கு தெரியாது. குடியிருப்பு வீடுகள் பிரிக்கப்பட்டுவிட்டன.தாவா சொத்துக்கள் அனைத்தும் முருகேசனுக்கு கொடுக்கப்பபட்ட சொத்துக்கள் என்றாலும், அந்த சொத்துக்களும் பிரிக்கப்பட்ட சொத்துக்கள்தான் என்றாலும், அந்த சொத்துக்களுக்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண். 225/11 என்பது 9 ஏக்கர் 44 செண்ட் விஸ்தீரணம் உள்ளது ஆகும். அது ஒரே தாக்காக உள்ளதா என்றால், மேல்புறம் ஒருபகுதியாகவும், கிழக்கில் ஒரு பகுதியாகவும் உள்ளது. கிழக்குபுறத்தில் 3 ஏக்கர் உள்ளதா என்றால் இல்லை. அது யார் அனுபவத்தில் உள்ளது என்றால், பொதுவாக உள்ளது. கிழக்குபுறத்திற்கும், மேற்குபுறத்திற்கும்இடையில் வரப்பு உள்ளதா என்றால், வரப்பு இல்லை. அடைப்பு உள்ளது. 5,6 பிரதிவாதிகள் அந்த நிலத்தில் ஒரு பகுதியில் அனுபவிக்கிறார் என்பது சரிதான். அவர்கள் அனுபவிக்கும் பகுதி 9 ஏக்கரில் வடக்கிலும், மேற்கிலும் உள்ளது. 5,6 பிரதிவாதிகள் அனுபவிக்கும் பகுதியை ஒட்டி கீழ்புறம் உள்ள பகுதியில் யார் அனுபவிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது. இந்த நிலத்தில் கேணி இல்லை. இந்த நிலம் புள்ளம்பாடி வாய்க்காலை ஒட்டிஉள்ளது. ஆனால் வாய்க்கால் பாசனம் கிடையாது. நான் இந்த சொத்தில் தென்புற ஓரத்தில் ஒரு பகுதியை அனுபவிக்கிறேன். சாட்சி மீண்டும் நாங்களும், பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவிக்கிறோம் என கூறுகிறார். எனக்கும், 5,6 பிரதிவாதிகளுக்கும் என்ன சம்மந்தம் என்றால், என் தாத்தாவோட தாத்தாவுக்கு அந்த பகுதியில் ஒரு பங்கு இருந்தது. தாவா 9வது அயிட்டம் பங்கு பிரிக்கப்பட்டுவிட்டது என்றாலும், கீழ்புறம் உள்ள பகுதியை நான் அனுபவித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

1 முதல் 4 பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட பாக பத்திரத்தை இன்றுவரை நான் பார்க்கவில்லை. தாவாவில் காட்டப்படாத முருகேசனுக்கு பாத்தியப்பட்ட வேறுசொத்துக்கள் உள்ளன. அதன் சர்வே எண் தெரியாது. ஆனால் தனியாக உள்ளது. வீடும் உள்ளது. தாவா 1 முதல் 9 அயிட்ட சொத்துக்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்கள் என்றாலும், அவற்றில் எனக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.